யானுல், அதற்கு மேல் அது பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கலாம். ஏகப்பட்ட வேலைகளைப் பரவலாக எடுத்துக் கொண்டு விட்டு, எதையும் சரியாக செய்ய முடியாத நிலைமை ஏற்படுவதை விட, ஒரு குறிப்பிட்ட பணியினை எடுத்துக் கொண்டு அதை செய்து முடிப்பதுதான் நல்லது. ஒவ்வொரு ஒன்றியமும் பலன் பெற வேண்டுமென்ற அடிப்படையில்தான் 6 பணியினை குறிப்பிட்டு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலே எதையாவது மாற்றவேண்டுமென்று சொன்னுல், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனையின் பேரில் மாற்றலாம். அதைக்கூட மத்திய அரசின் யோசனையின் பேரில்தான் செய்ய முடியும். இந்த 6 குறிப்பிட்ட பணிகள் கூட மத்திய அரசு கூறியதன் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளைச் செய்கிற தலைப்பில் பள்ளிக்கூடம் கட்டுவதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குச் சொன்னேம். அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் கூறிய தலைப்பின் கீழ்தான் இப்போது ஆங்காங்கு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. சோ. கருணைநாதன் : தலைவரவர்களே, இத்திட்டத்தின் கீழ் புதிய சாலைகளை அமைக்கிற நேரத்தில் தனியார் பூமி குறுக்கிடுகிற காரணத்தால் அந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட பூமிகளை அரசாங்கம் கையகப்படுத்தித்தர முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட இடைஞ்சல்கள் ஏற்படுகிறபோது, அவற்றை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை முறைப்படி மேற்கொள்ளும்.

College of Karnatic Music

* 403 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the details of the new courses of study to be started at the College of Karnatic Music, Madras, from this year; and

(*b*) the details of the syllabus prepared for them?

[1972 மார்ச் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) சென்னையிலுள்ள கர்நாடக இசைக் கல்லூரியில் புதிதாக கீழ்க்கண்ட வகுப்புகள் தொடங்க அனுமதிக்கப் பட்டுள்ளன :—

(1) புல்லாங்குழல் ;

(2) மிருதங்கம் ;

(3) பரதநாட்டியம்.

(ஆ) புல்லாங்குழல், மிருதங்கம், வகுப்புகளுக்கான பாடத் திட்டம் முடிவு செய்யப்பட்டு வருகிறது. பரத நாட்டிய வகுப்பிற்கு பரதநாட்டியத்தில் அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கான (உயர்நிலை) பாடத் திட்டத்தையே கர்நாடக இசைக் கல்லூரியில் ஆரம்பிக்கவிருக்கும் பரதநாட்டியம் வகுப்பிற்கும் வைத்துக் கொள்ளலாமென்று அந்தக் கல்லூரித் தலைவர் கூறியுள்ள யோசனையை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணம்

*404 வினா—**திரு. சி. மணலி கந்தசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்யும் செயற் குறிப்பு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்கு மாணவர்களுக்கு பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி கொடுக்கப் படுகிற காரணத்தால், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு பீஸ் கட்டாமல் பரிட்சைக்கு செல்லுவதற்கு இந்த ஆண்டு எழுதும் மாணவர்களுக்காவது எக்சம்ஷன் அளிப்பதற்கு ஆலோசிக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி கொடுப்பது என்பது வேறு